கொள்கைக் குறிப்பு

# ஏற்றுமதி வெற்றிக்கான உள்நாட்டுத் தடைகளைக் குறைத்தல்

### ஏற்றுமதிப் பதிவு நடைமுறையை எளிதாக்குவதும் நியாயபூர்வமானதாக்குவதும் முக்கியம்

## சுருக்கம்

இலங்கையில் ஏற்றுமதியை ஊக்குவித்தல் அடுத்தடுத்து வந்த அரசாங்களின் ஒரு முக்கிய கொள்கை இலக்காக இருந்துவருகிறது. தற்போதைய அரசாங்கம் அதன் தொலைநோக்கு அறிக்கையில் 2020ம் ஆண்டில் ஏற்றுமதிகளை ஆண்டொன்றிற்கு USD 20 பில்லியனாக இரட்டிப்பதற்கு இலக்கிடுகிறது.[1]

முழுமையாக உள்நாட்டு சந்தையின் தேவையைப் பூர்த்தி செய்தல் என்ற நிலையிலிருந்து ஒரு வியாபாரத்தை ஏற்றுமதி சந்தையில் ஈடுபடும் ஒன்றாக மாற்றுகின்றபோது இலங்கையில் உள்ள ஓர் உள்நாட்டு வியாபாரம் பின்பற்றவேண்டிய தற்போதைய நடைமுறையை விமர்சன ரீதியில் ஆராய்வதற்கு வெறிட்டே ரிசேச் நிறுவனத்தால் மேற்கொள்ளப்பட்ட ஓர் ஆய்வின் முக்கிய கண்டறிதல்களை இக்கொள்கைக் குறிப்பு விளக்குகிறது. தற்போதைய பதிவு நடைமுறை தேவையற்றவாறு நீண்டதாக, வினைத்திறனற்றதாக, ஏனையவர்களோடு ஒப்பிடுகையில் தனி உரிமையாளர்களுக்கு/ பங்குடைமைகளுக்கு சுமை மிக்கதாக இருப்பதை இவ்வாய்வு காண்கிறது. ஒரு நியாபூர்வ அடிப்படையில் நியாயப்படுத்தபட முடியாத தேவையற்ற இந்நடவடிக்கைகளில் பல, ஏற்றமதி செய்யக் கூடியவர்களாக இருப்பதற்கு இலங்கையின் பிரதான ஏற்றுமதி ஊக்குவிப்பு நிறுவனமான ஏற்றுமதி அபிவிருத்தி சபையில் (EDB)[2] பதிவு செய்துகொள்ள வேண்டியிருக்கும் தேவையிலிருந்தே எழுகின்றன.[2] நுனுடீயில் பதிவு செய்வது, தற்போதைய ஏற்றுமதி நடைமுறையில் முக்கியமானதாகவிருக்கும் இரண்டு அரசாங்கநிறுவனங்களில் - உள்நாட்டு இறைவரித் திணைக்களம் (IRD) மற்றும் இலங்கை சுங்கத் திணைக்களம் (SLC) - பதிவு செய்வதற்கான ஒரு முன்நிபந்தனையுமாகும்.

தற்போதைய பதிவு நடைமுறை புதிய ஏற்றுமதியாளர்களை இனங்கண்டு அவர்களுக்கு உறுதுணை புரியும் எண்ணத்தோடு அறிமுகப்படுத்தப்பட்டதெனினும், அதன் நிறைவேற்றம் இவ்விலக்கை அடைவதற்கு பெரும் தடையாக அமைகிறது. தற்போதிருக்கும் நீண்ட, வினைத் திறனற்ற மற்றும் சுமைநிறைந்த நடைமுறையானது, பெரும் நிறுவனங்களோடு ஒப்பிடுகையில், சர்வதேச சந்தையில் பிரவேசிப்பதில் அதிகளவில் அரசாங்க உதவி தேவைப்படும் சிறு மற்றும் நடுத்தர தொழில் முயற்சியாளர்களுக்கு (SME) உதவுவதைவிட அதிகம் தடையாகவே அமைந்துள்ளன.

## முக்கிய கண்டறிதல்கள்

### 1. ஏற்றுமதி பதிவு நடைமுறை நீளமானது, பொருத்தமற்றது, நியாயபூர்வ தன்மையற்றது

தனி உரிமையாளருக்கான/ பங்குடைமைக்கான தற்போதைய பதிவு நடைமுறையில் குறைந்த பட்சம் 10 படிநிலைகளும் ஆறு வெவ்வேறு நிறுவனங்களும் சம்பந்தப்பட்டுள்ளன என்பதோடு, அது நிறைவடைவதற்கு 1 - 3 வாரங்கள் பிடிக்கும். ஏற்றுமதி அனுமதிப்பத்திரம்/ உரிமம்[3] 2 தேவைப்படும் உற்பத்திப்பொருட்களை ஏற்றுமதி செய்ய விரும்பும் வியாபாரங்களுக்கு இந்நடைமுறை மிக நீளமானது. எடுத்துக்காட்டாக, ஓர் உரிமம்[3] தேவைப்படும் தெங்குப் பொருட்களை ஏற்றமதி செய்ய விரும்பும் வியாபாரங்களுக்கு இந்நடைமுறை 2 - 4 மேலதிக வாரங்கள் எடுப்பதோடு, ஒரு ஏற்றுமதியாளரைப் பதிவு செய்வதற்கு எடுக்கும் மொத்த காலத்தை 3 - 7 வாரங்களாக அதிகரிக்கும்.

இந்நடைமுறையிலுள்ள பல படிநிலைகள் ஒரு தெளிவான காரணமற்றவையாய் உள்ளன. உதாரணமாக, ஏனைய அதிகாரபீடங்களில் பதிவு செய்வதற்கு ஒரு முன்நிபந்தனையாக விளங்கும் நுனுடீஇலான கட்டாய பதிவு கிராம உத்தியோகத்தரினால் (கி.உ.) அமைவிடத்தில் மேற்கொள்ளப்படும் அவ் வியாபாரம் பற்றிய மதிப்பீட்டின் அடிப்படையில் தீர்மானிக்கப்படுகிறது. இந்த கி.உ., அமைவிட மதிப்பீட்டை நடத்துவதற்கு பயிற்றப்படவுமில்லை, ஏற்றுமதி செய்வதற்கான வியாபாரத்தின் பொருத்தப்பாட்டை மதிப்பிடுவதற்கான தெளிவான எடுகோள்கள் அவருக்கு வழங்கப்படவுமில்லை.

மேலும், சம்பந்தப்பட்ட நிறுவனங்களினால் இந்நடைமுறை எல்லா இடங்களிலும் ஒரே சீராக பிரயோகிக்கப்படுவதில்லை. எடுத்துக்காட்டாக, சில பிரதேச செயலகங்கள் (DS) இறக்குமதி ஏற்றுமதி கட்டுப்பாட்டுத் திணைக்களத்திடமிருந்து (DIEC) அனுமதிக் கடிதமொன்றைக் கோருகின்ற அதேவேளை, ஏனையவை அவ்வாறு கோருவதில்லை. இவ்வனுமதிக் கடிதத்தைக் கோருகின்ற பிரதேச செயலகங்களில் பதிவு செய்த ஒரு வியாபாரத்திற்கு இந்நடைமுறை அதிக பளுநிறைந்ததாகவும் நீண்டதாகவும் அமைந்துவிடுகிறது.

### 2. இப்போதுள்ள நடைமுறை அதன் தெளிவற்ற தன்மை மற்றும் குறைவான தகவல் காரணமாக பளுமிக்கதாக உள்ளது.

பதிவு செய்துகொள்வதற்குத் தேவையான தகவல்களை பெற்றுக்கொள்வதில் வியாபாரங்கள் எதிர்நோக்கும் சிரமங்கள் அந்நடைமுறையை தெளிவற்றதாக்குகின்றன.

## கொள்கைக் குறிப்பு

பதிவு நடைமுறை முழுவதற்குமான விபரங்களளிக்கும் தனியொரு தகவல் மூலம் இல்லாமை காரணமாக, வியாபாரங்கள் தேவையான தகவல்களைப் பெற்றுக்கொள்வதற்கு ஒவ்வொரு நிறுவனத்தினதும் இணையத் தளங்களை நாட அத்துடன்/ அல்லது நிறுவனங்களுக்கு நேரடி விஜயங்களை மேற்கொள்ள வேண்டியுள்ளது. மேலும், தனியொரு நிறுவனத்தில் பதிவு செய்துகொள்வது தொடர்பான தகவல்களும் அங்குமிங்குமாக பல இணையத்தளங்களில் பரவிக் கிடக்கின்றன. எடுத்துக்காட்டாக, IRD, EDB மற்றும் தேயிலைச் சபை ஆகியவற்றின் இணையத் தளங்கள் அவற்றின்மூலம் பதிவு செய்வதற்கு எடுக்கும் காலம் பற்றிய தகவல்களை வழங்குவதில்லை. இத் தகவல்களை அரசாங்க தகவல் மையத்தின் இணையத் தளத்தில் காணலாம். தகவல் போதாமையினாலும் ஏற்றுமதி செய்யயக்கூடியவர்கள் பாதிப்படைகின்றனர். உதாரணமாக, இலங்கை சுங்கத் திணைக்களத்தில் பதிவு செய்துகொள்வதற்கு ஏற்றுமதியாளர்களாக ஆகக்கூடியவர்கள் சுங்க இல்ல முகவரின் (CHA) உதவியைப் பெற்றுக்கொள்ள வேண்டும். எனினும், இலங்கை சுங்கத் திணைக்களத்தில் பதிவு செய்துள்ள CHAகளின் பட்டியலொன்று பகிரங்கமாகக் கிடைக்ககூடியதாக இல்லை. தெளிவற்ற தன்மையும் தகவல் போதாமையும் சிறு மற்றும் மத்தியதர தொழில் முயற்சியாளர்கள் மீது, குறிப்பாக மேல் மாகாணத்திற்கு வெளியே உள்ளவர்கள் மீது அநாவசியப் பளுவைச் சுமத்துகிறது. அவர்கள் தம்மை ஏற்றுமதியாளர்களாகப் பதிவு செய்துகொள்வதற்காக கொழும்பிற்கு பலமுறை பயணம் செய்யவேண்டியிருக்கும்.

## ஆய்வு மேலோட்டம்

### 1. ஒரு ஏற்றுமதியாளரை பதிவு செய்யும் நடைமுறை நீளமானது, பொருத்தமற்றது நியாயபூர்வ தன்மையற்றது

1.1. ***இந் நடைமுறை நீளமானது.***

உள்நாட்டு சந்தையின் தேவையை மாத்திரம் பூர்த்தி செய்வதிலிருந்து சர்வதேச சந்தைக்கு விரிவாக்கமடையும் மாற்றத்தை மேற்கொள்ளும் இலங்கையிலுள்ள வியாபாரங்கள் பதிவு நடைமுறை ஒன்றிற்கு உள்ளாக வேண்டியுள்ளது. ஏற்றுமதியில் ஈடுபடுவதற்கு எண்ணங்கொண்டுள்ள தனி உரிமையாளர்களுக்கு/ பங்குடைமைகளுக்கு கட்டாயமாக்கப்பட்டுள்ள பதிவு நடைமுறை கீழே காணப்படும் அட்டவணை 1 இல் விளக்கப்பட்டுள்ளது. இந்த நடைமுறையில் 10 படிநிலைகளும் ஆறு நிறுவனங்களும் சம்பந்தப்பட்டுள்ளன. எனினும் எல்லா வியாபாரங்களும் ஒரே படிநிலைகளுக்கு உள்ளாகவேண்டியதில்லை: கம்பனிகள் பதிவாளர் திணைக்களத்தில் (பொறுப்பு வரையறுக்கப்பட்ட கம்பனிகளாக) பதிவு செய்துள்ளவை இப்படிநிலைகளுள் ஆறு படிநிலைகளைத் (நீல நிறத்தில் காட்டப்பட்டுள்ளவை) தவிர்த்துச் செல்லாம். மேலும், ஏற்றுமதிக்கான பொருட்களுக்கு உரிமம் வழங்குதல் தொடர்பான நிபந்தனைகள் மற்றும் வியாபாரம் தொடங்கப்படும் பிரதேச செயலகப் பிரிவு ஆகியவற்றைப் பொறுத்து சில வியாபாரங்கள் மேலும் சில படிநிலைகளைப் (மஞ்சள் நிறத்தில் காட்டப்பட்டவை) பூர்த்தி செய்யவேண்டும்.

கீழே உள்ள அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு, இந் நடைமுறை 1 - 3 வாரங்கள் எடுக்கும். உரிமம் பெற்ற பொருட்களை ஏற்றுமதி செய்ய விரும்பும் வியாபாரங்களுக்கு எடுக்கும் காலம் இதைவிட நீண்டதாகும் (அட்டவணை 1: படிநிலை 4அ). உதாரணமாக உரிமம் பெறவேண்டிய ஒரு உற்பத்திப் பொருளான தேங்காய் ஏற்றுமதி செய்ய விரும்பும் வியாபாரங்கள் தம்மை

**பெட்டி 1: தெங்கு அபிவிருத்தி அதிகார சபையில் (CDA) பதிவுசெய்வதில் உள்ள நடைமுறை[6]**

படிநிலை 1: விண்ணப்பதாரர் ஓர் உற்பத்தியாளராயின், (விதை அல்லது விதை அல்லாத உற்பத்திப் பொருட்களுக்கான) CDAஇன் பதனிடல் அபிவிருத்திப் பிரிவிலிருந்து உற்பத்தியாளர் பதிவுச் சான்றிதழ் ஒன்று பெற்றுக்கொள்ளவேண்டும் (புதிய வியாபாரங்களுக்கு மாத்திரம் பொருந்தும்). விண்ணப்பதாரர் ஓர் உற்பத்தியாளர் அல்லவெனில், CDAஇன் பதனிடல் அபிவிருத்திப் பிரிவில் பதிவு செய்துகொண்டுள்ள ஓர் உற்பத்தியாளரிடமிருந்து சம்மதக் கடிதமொன்றும் அவரது உற்பத்தியாளர் பதிவுச் சான்றிதழின் பிரதியொன்றும் பெற்றுக்கொள்ளப்படவேண்டும்.

படிநிலை 2: களஞ்சிய உரிமையாளர்கள் தமது களஞ்சியங்களுக்கு காப்பீட்டுப் பத்திரமொன்றைப் பெற்றுக்கொள்ள வேண்டும். சொந்தமாக களஞ்சியங்கள் இல்லாது அவற்றை வாடகைக்குப் பெற்றிருப்பவர்கள் தெங்கு அபிவிருத்தி அதிகார சபையில் தம்மை ஒரு ஏற்றுமதியாளராப் பதிவு செய்துகொண்டிருக்கவேண்டிய களஞ்சிய உரிமையாளரிடமிருந்து தாம் அக்களஞ்சியத்தை பயன்படுத்துவதற்கான சம்மதக் கடிமொன்றைப் பெற்றுக்கொள்ளவேண்டும்.

படிநிலை 3: உரிய முறையில் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப்படிவத்தை தேவையான ஆவணங்களோடு சமர்ப்பித்து பதிவுக் கட்டணத்தைச் செலுத்தவேண்டும். தேவையான ஆவணங்கள் வியாபார பதிவுப் பத்திரம், கோரிக்கைக் கடிதம், உற்பத்தியாளர் பதிவுப் பத்திரம்/ ஓர் உற்பத்தியாளரிடமிருந்தான சம்மதக் கடிதம், காப்பீட்டுப்பத்திரம் மற்றும் சொந்தமாக களஞ்சியம் இல்லாதவிடத்து, களஞ்சியத்தைப் பயன்படுத்துவதற்கு களஞ்சிய உரிமையாளரிடமிருந்து பெறப்பட்ட சம்மதக் கடிதம் ஆகிவற்றை உள்ளடக்கும்.

படிநிலை 4: களஞ்சிய உரிமையாளுக்கு, CDAயினால் விதித்துரைக்கப்பட்டவாறு தேவையான தரங்கள் பூர்த்திசெய்யப்பட்டிருப்பதை உறுதி செய்வதற்கு ஓர் ஆரம்ப களஞ்சிய பார்வையிடல் நடத்தப்படும்.

## கொள்கைக் குறிப்பு

அட்டவணை 1: ஏற்கனவே இலங்கையில் வியபாரம் செய்வதற்கு பதிவு செய்துள்ள தனி உரிமையாளர்கள்/ பங்குடைமைகள் ஏற்றுமதியாளர்களாக பதிவு செய்துகொள்வதற்கான நடைமுறையின் விபரங்கள்[2]

| படிநிலைகள் | கட்டாயமாக பதிவு செய்ய வேண்டிய முக்கிய நிறுவனங்கள் மற்றும் ஒவ்வொரு படிநிலையிலுமான தேவைப்பாடுகள் | எடுக்கும் காலம் |
|---|---|---|
| | **ஏற்றுமதி அபிவிருத்தி சபை (EDB)**<br>EDBஇல் பதிவு செய்வதற்கு, வியாபாரங்கள் வியாபாரத்தின் தன்மையை குறிக்கும் வியாபார பதிவுப் படிவத்தின் 2 ஆம் கூட்டில் “ஏற்றுமதி” என்ற சொல்லைச் சேர்த்துக்கொள்வதற்காக தமது வியாபார பதிவை திருத்தவேண்டும்.[7] | |
| படிநிலை 1: பிரதேச செயலகங்களிலிருந்து விண்ணப்பப்படிவம் | வியாபாரத்தின் தன்மையை மாற்றுவதற்கு, வியாபார உரிமையாளர்கள் சம்பந்தப்பட்ட பகுதியின் பிரதேச செயலகத்திற்கு (DS) பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப்படிவமொன்றை சமர்ப்பிக்க வேண்டும் (வியாபார பதிவை வியாபாரப் பெயர் பதிவுத் திணைக்களம் கையாளுகின்ற மேல் மாகாணம் தவிர). பிரதேச செயலகப் பிரிவுகளின் வலைத் தளங்களில் இணையத்தில் உரிய விண்ணப்பப்படிவங்கள் இல்லை. எனவே, வியாபார உரிமையாளர்கள் வியாபாரத்தின் தன்மையை மாற்றுவதற்கான விண்ணப்பப்படிவத்தைப் பெற்றுக்கொள்வதற்காக னுளு செயலகத்திற்கு நேரில் செல்லவேண்டும். வியாபாரப் பெயர் பதிவுத் திணைக்களம் தனது வலைத்தளத்தில் உரிய ஆவணங்களை பதிவிறக்கம் செய்வதற்காக இட்டுள்ளது.[8] | 3 நாள் முதல் 1 வாரம் வரை |
| படிநிலை 2: கிராம உத்தியோகத்தரது பரிந்துரைக் கடிதம் | ஏற்றுமதி செய்வதற்கான நிறுவனத்தின் ஸ்திரத்தன்மையை தீர்மானிப்பதற்கு பகுதியின் கி. உ.இ அமைவிடத்திற்கு விஜயமொன்றை மேற்கொண்டு ஏற்றமதி பதிவிற்கான வேண்டுகோள் நியாயமானதென்று கடிதமொன்று வழங்க வேண்டும்.[9] | |
| படிநிலை 3: பிரதேச செயலகத்தில் வியாபார பதிவைத் திருத்துதல் | ‘வியாபாரத்தின் தன்மை’ என்ற கூடு ‘ஏற்றுமதி’ என்ற சொல்லை உள்ளடக்கியுள்ள திருத்தப்பட்ட வியாபார பதிவு படிவமொன்றைப் பெற்றுக்கொள்வதற்கு வியாபார உரிமையாளர் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பம், கி.உ. இன் பரிந்துரைக் கடிதம் மற்றும் ஒரு சத்தியக் கடதாசி ஆகியவற்றைச் சமர்ப்பிக்கவேண்டும். | |
| படிநிலை 3அ: இறக்குமதி மற்றும் ஏற்றுமதிக் கட்டுப்பாட்டு திணைக்களத்தின் கடிதம் | மேற்குறிப்பிடப்பட்டவற்றிற்கு மேலதிகமாக ஒரு சில னுளுகள் இறக்குமதி மற்றும் ஏற்றுமதிக் கட்டுப்பாட்டுத் திணைக்களத்திடமிருந்து (DIEC) அனுமதியையும் கோருகின்றன. இது, வியாபாரம் ஏற்றுமதி செய்ய விரும்பும் உற்பத்திப் பொருட்கள் இலங்கையிலிருந்து ஏற்றுமதி செய்வதற்கு அனுமதிக்கப்பட்டவையா என்பதை பார்ப்பதற்காகும். | |
| படிநிலை 4: EDBயினால் வழங்கப்படும் தற்காலிக பதிவு | மூன்று மாத காலத்திற்கு செல்லுபடியாகும் தற்காலிக சான்றிதழைப் பெற்றுக்கொள்வதற்காக திருத்தப்பட்ட வியாபார பதிவு பத்திரமும் EDB பதிவிற்கான பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப்படிவமும் EDBவிற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும்.[10] | 30 நிமிடம் |
| படிநிலை 4அ: உரிமம் வழங்கும் நிறுவனங்களில் பதிவு செய்தல் | இலங்கையிலிருந்து ஏற்றுமதி செய்யப்படும் பல பொருட்களுக்கு இவ் உற்பத்தி பொருள் துறையை மேற்பார்வை செய்யும் சம்பந்தப்பட்ட நிறுவனங்களிடமிருந்து பெறப்படும் ஏற்றுமதி அனுமதிப்பத்திரம்/உரிமம் தேவை.[11] EDB பதிவிற்கு முன்னர் சம்பந்தப்பட்ட அதிகார பீடங்களில் பதிவை பூர்த்தி செய்யுமாறு இப் பொருட்களை ஏற்றுமதி செய்ய விரும்பும் வியாபாரங்களை EDB கோருகின்றது.[12] இவ்வாறாக, இப்பொருட்களை ஏற்றுமதி செய்ய விரும்பும் வியாபாரங்களுக்கு இந்நடைமுறை நீண்டதாக மாறுகிறது (தேங்காய் ஏற்றுமதி செய்ய விரும்பும் வியாபாரங்கள் பற்றிய ஒரு விடய ஆய்விற்காக பெட்டி 1 ஐ பார்க்க). | 2-4 வாரங்கள் |

# கொள்கைக் குறிப்பு

அட்டவணை 1: ஏற்கனவே இலங்கையில் வியபாரம் செய்வதற்கு பதிவு செய்துள்ள தனி உரிமையாளர்கள்/ பங்குடைமைகள் ஏற்றுமதியாளர்களாக பதிவு செய்துகொள்வதற்கான நடைமுறையின் விபரங்கள் (தொடக்கம்...)

| படிநிலைகள் | கட்டாயமாக பதிவு செய்ய வேண்டிய முக்கிய நிறுவனங்கள் மற்றும் ஒவ்வொரு படிநிலையிலுமான தேவைப்பாடுகள் | எடுக்கும் காலம் |
|---|---|---|
| **உள்நாட்டு இறைவரித் திணைக்களம் (IRD)**<br>(ஏற்கனவே வரி இனங்காணல் இலக்க (TIN) பதிவையும் வற் சான்றிதழையும் கொண்டிருக்கும் வியாபாரங்களுக்கு இப்படிநிலைகள் பொருந்தாது.)[13] | | |
| படிநிலை 5: வரி இனங்காணல் இலக்க (TIN) பதிவு | சகல ஏற்றுமதியாளர்களும் ஏற்றுமதியின்போது உரிய வரிகளை செலுத்தக்கூடியவாறு ஐசுனுயிடமிருந்து பெறப்பட்ட TIN ஒன்றைக் கொண்டிருக்க வேண்டும்.[14] | 30 நிமிடம் |
| படிநிலை 6: கூட்டிய பெறுமதி வரி (VAT) பதிவு | TINஐ பெற்றுக் கொண்ட பின்னர்இ வற் பதிவைப் பெற்றுக்கொள்வதற்கு விண்ணப்பதாரர் TINஐ பெற்றுக் கொள்வதற்காக சமர்ப்பித்த அதே ஆவணத் தொகுதியை சமர்ப்பிக்க வேண்டும்.[15] | 30 நிமிடம் |
| இலங்கை சுங்கம் (SLC) | | |
| படிநிலை 7: வியாபார அமை-விடம் கிராம உத்தியோகத்தரினால் சான்றுப்-படுத்தப்படுதல் | சுங்கப் பதிவிற்கான விண்ணப்பப்படிவம் சுங்க வலைத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்து கொள்ளப்பட வேண்டும். இவ்விண்ணப்பப்படிவத்தின் 10ஆம் பிரிவு அவ்வாவணத்தில் குறிப்பிடப்படும் வியாபாரத்தின் அமைவிடத்தை/முகவரியை உறுதிப்படுத்தி உரிய கிராம உத்தியோகத்தரினால் அங்கீகரிக்கப்பட்டு கைச்சாத்திடப்படவேண்டும்.[16] | 1 நாள் |
| படிநிலை 8: இலங்கை சுங்கத் திணைக்களத்தில் பதிவு செய்துகொள்வற்கு சுங்க இல்ல முகவரின் (CHA) சேவையைப் பெற்றுக்கொள்ளல் | சுங்கப் பதிவிற்கான விண்ணப்பப்படிவத்தின் பிரிவு 7இல் தேவைப்படுத்தப்பட்டவாறு, ஒரு ஊர்யுவின் பெயரும் முகவரியும் தரப்பட வேண்டும்.[17] சுங்கத் திணைக்களத்தினால் வெளியிடப்பட்ட ஒரு விசேட அறிவுறுத்தல் வழிகாட்டு நெறியில் வழங்கப்பட்டுள்ள தகவல்களின்படியும் (அதனை பின்னிணைப்பு 9 இல் காணலாம்) உரிய உத்தியோகத்தர்களுடனான நேர்முகங்களின்படியும் இலங்கை சுங்கத் திணைக்களத்தின் தன்னியக்க முறைமைக்கு (ASYCUDA) விண்ணப்பதாரர்களின் தகவல்களை பதிவேற்றம் செய்வதற்கு விண்ணப்பதாரிகளுக்கு ஒரு CHAவின் உதவி தேவை.[15] இலங்கை சுங்கத் திணைக்களத்தில் பதிவு செய்துகொண்டுள்ள எல்லா CHAகளினதும் பட்டியலொன்று பகிரங்கமாக கிடைக்கக்கூடியதாக இல்லை.[16] ஏற்றமதியாளர் சுங்கத் திணைக்களத்தின் மனிதவள பிரிவிடம் ஒரு பட்டியலை கோரலாம் அல்லது அங்கு இருக்கும் CHAகளின் சேவையை நாடலாம். விண்ணப்பதாரர் இச்சேவைக்காக CHAவிற்கு கொடுப்பனவொன்றை செலுத்த வேண்டும். | 2 நாட்கள் |
| படிநிலை 9: இலங்கை சுங்கத் திணைக்களத்தில் பதிவு செய்தல் | உரிய விபரங்கள் ASYCUDAமுறைமையில்(படிநிலை 8இல் விளக்கப்பட்டவாறு) பதிவேற்றம் செய்யப்பட்டதும் ஏற்றுமதியாளர் விண்ணப்பப்படிவத்தில் குறித்துரைக்கப்பட்டவாறான ஏனைய ஆவணங்களோடு பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப்படிவத்தை இலங்கை சுங்கத் திணைக்களத்தின் TIN மற்றும் வற் பதிவுப் பிரிவிற்கு சமர்ப்பிக்கவேண்டும். விண்ணப்பப்படிவத்தில் குறித்துரைக்கப்பட்ட ஏனைய ஆவணங்கள் நுனுடீ சான்றிதழ், TIN மற்றும் வற் சான்றிதழ்கள் மற்றும் காணி உறுதிப்பத்திரம், நீர் மற்றும் மின்சார பட்டியல் முதலிய முகவரியை நிரூபிப்பதற்குத் தேவையான ஏனைய ஆவணங்கள் ஆகியவற்றை உள்ளடக்கும். இந்த ஆவணங்களை சமர்ப்பித்ததும் சுங்கத் திணைக்களத்தில் பதிவு செய்யும் நடைமுறை நிறைவடையும். | ஒரு சில நிமிடங்கள் முதல் 1 நாள் வரை |

## கொள்கைக் குறிப்பு

அட்டவணை 1: ஏற்கனவே இலங்கையில் வியபாரம் செய்வதற்கு பதிவு செய்துள்ள தனி உரிமையாளர்கள்/ பங்குடைமைகள் ஏற்றுமதியாளர்களாக பதிவு செய்துகொள்வதற்கான நடைமுறையின் விபரங்கள் (தொடக்கம்...)

| படிநிலைகள் | கட்டாயமாக பதிவு செய்ய வேண்டிய முக்கிய நிறுவனங்கள் மற்றும் ஒவ்வொரு படிநிலையிலுமான தேவைப்பாடுகள் | எடுக்கும் காலம் |
|---|---|---|
| ஏற்றுமதி அபிவிருத்தி சபை | | |
| படிநிலை 10: EDBயிடமிருந்து நிரந்தர பதிவுச் சான்றிதழ் பெற்றுக் கொள்ளல் | ஏற்றுமதியாளர் கணிசமான தொகையிலான இரண்டு மூன்று ஏற்றுமதிகளை பூர்த்தி செய்ததும் ( "கணிசமான அளவு" ஆக இருப்பதாக கருதப்படுவதற்கு தேவையான ஏற்றுமதிகளின் தொகையும் பெறுமதியும் தெளிவற்றதாக உள்ளது), வியாபாரம் EDBஇல் நிரந்தர பதிவிற்கு விண்ணப்பிக்க முடியும்.[19] | வேறுபட-க்கூடியது |

ஒரு ஏற்றமதியாளராக தெங்கு அபிவிருத்தி அதிகார சபையில் பதிவு செய்யவேண்டும். இந்நடைமுறையில் சம்பந்தப்பட்ட படிநிலைகள் மேலே காணப்படும் பெட்டி 1 இல் சுருக்கமாக விளக்கப்பட்டுள்ளன. இந்நடைமுறை மேலதிகமாக 2 – 4 வாரங்கள் எடுப்பதோடு, ஒரு ஏற்றுமதியாளராகப் பதிவு செய்வதற்கு எடுக்கும் மொத்த காலத்தை 3 – 7 வாரங்களாக நீட்டிக்கின்றது.

### 1.2. *பின்வரும் நிபந்தனைகள் நியாயபூர்வமற்றவையாக உள்ளன.*

#### *1.2.1 'ஏற்றுமதி' என்ற சொல்லை வியாபார பதிவில் சேர்ப்பதற்கு 'வியாபாரத்தின் தன்மையை' மாற்றுவ-தற்கான தேவை*

தனி உரிமையாளருக்கு/ பங்குடைமைகளுக்கு அட்டவணை 1 இல் பட்டியலிடப்பட்டுள்ள முதல் மூன்று மேலதிக படிநிலைகள், இலங்கையிலிருந்து ஏற்றமதி செய்யத் தகுதி பெறுவதற்கு ஏற்றுமதி அபிவிருத்தி சபையில் பதிவு செய்வதைக் கட்டாயமானதாக்கும் 1985 ஜுன் 27 ஆம் திகதிய 355/14 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானியிலிருந்து தோன்றுகின்றன. EDBஇல் பதிவு செய்வதற்கு வியாபார நிறுவனங்கள் 'ஏற்றுமதி' என்ற சொல்லை உள்ளடக்குவதற்காக தமது வியாபார பதிவின் தன்மையை திருத்த தமது பிரதேச செயலகங்களுக்கு விண்ணப்பிக்க வேண்டும்.[4] EDBஇன் கூற்றுப்படி, EDBஇல் பதிவு செய்வதற்கான தற்போதைய நடைமுறையின் குறிக்கோள் EDB ஆதரவளிக்கக்கூடிய ஏற்றமதிக்குத் தயாராக உள்ள வியாபாரங்கள்/ உண்மையான ஏற்றுமதியாளர்கள் மற்றும் புதிய ஏற்றுமதியாளர்கள் ஆகியோரை இனங்காண்பதாகும்.[5]

எனினும், EDBஇன் குறிக்கோளை அடைவதற்கு தற்போதைய நடைமுறையின் உதவுந்தன்மை பெரிதும் ஐயத்திற்குரியதாக உள்ளது. ஜுஇ கிராம உத்தியோகத்தரின் பரிந்துரையை நம்பியுள்ளது. கி.உ. வியாபார அமைவிடத்திற்கு சென்று, "ஏற்றுமதி" என்ற சொல்லை உள்ளடக்குவதற்கும் வியாபாரத்தின் தன்மையை மாற்றுவதற்கும் வியாபாரம் ஏற்றுமதி செய்வதற்கு ஸ்திரமானதென்று தீர்மானிப்பார். ஏற்றுமதிக்கு தயாராக உள்ள வியாபாரம் என்பதை எது தீர்மானிக்கின்றது என்பது தொடர்பாக கி.உ.க்கு மட்டுப்படுத்தப்பட்ட அறிவுதான் உண்டு என்பதோடு, அவர் அதற்காக பயிற்றப்படவுமில்லை, புறவயமானதும் நியாயமானதுமான ஒரு மதிப்பீட்டை மேற்கொள்ள உதவுவதற்கு அவருக்கு ஒரு எடுகோள்களின் நிரல் அல்லது வழிகாட்டிகள் வழங்கப்படவுமில்லை. இது, இலங்கையில் உண்மையான/ ஏற்றுமதிக்குத் தயாரான வியாபாரங்களை இனங்காணும் ஒரு வழி என்ற வகையிலான தற்போதைய பதிவு நடைமுறையின் நம்பகத் தன்மை அல்லது பயன் குறித்த கவலையை எழுப்புகிறது.

புதிய ஏற்றுமதியாளர்களை இனங்காணுதல் என்ற ரீதியில் SLC EDBவிற்கு இத்தகவல்களை வழங்கமுடியும். SLC செய்யப்பட்ட எல்லா ஏற்றுமதிகளையும் பதிவு செய்கிறது. எனவே ஏதேனும் ஒரு குறிப்பிட்ட காலப்பகுதியில் முதல் முறையாக ஏற்றுமதியை தொடங்கிய வியாபார நிறுவனங்களின் பட்டியலொன்றை மிக எளிதாக EDBவிற்கு வழங்க முடியும். ஒரு கி.உ.ரின் பரிந்துரைக் கடிதத்தை நம்பியிருக்கும் ஒரு நடைமுறையோடு ஒப்பிடுகையில், இலங்கைச் சுங்கத்தின் தரவுத் தளம் புதிய ஏற்றுமதியாளர்களை இனங்காண்பதற்கு மிகவும் நம்பகமான மூலமாக இருக்கக்கூடும்.

எனவே, ஏற்றுமதிக்கு தயாராக உள்ள வியாபாரங்கள் மற்றும் புதிய ஏற்றுமதியாளர்கள் பற்றிய நம்பகமான தகவல்களை உருவாக்கத் தவறும் தற்போதைய நடைமுறை தெளிவான நியாயப்பாடு அற்றதாக உள்ளதோடு, உண்மையில் தேவையற்றதாகவும் உள்ளது. அது, முழுக்க உள்நாட்டு சந்தையில் கவனம் செலுத்துவதாக இருப்பதிலிருந்து ஏற்றுமதி செய்யும் ஒன்றாக தன்னை மாற்றிக்கொள்ள விரும்பும் வியாபார நிறுவனங்கள்மீது மேலதிக பளு ஒன்றையே சுமத்துகிறது. இப்பிரச்சினைகளுக்கு மேலதிகமாக, தற்போதைய நடைமுறையானது துபிரயோகம் செய்யப்படுவதற்கு வாய்ப்பானதாகவும் உள்ளது. உதாரணமாக, சில விண்ணப்பதாரர்களின் வியாபாரத்தின் நம்பகத் தன்மைக்கான ஓர் அடையாளமாக EDB ஏற்றுமதியாளர் பதிவு காணப்படுவதால் வங்கிகளிலிருந்து ஒரு கடனைப் பெற்றுக்கொள்ளும் தனது வாய்ப்புகளை

## கொள்கைக் குறிப்பு

உறுதிப்படுத்துவதற்காக சில வியாபாரங்கள் EDB சான்றிதழைப் பெற்றிருப்பதாகக் கூறப்படுகிறது.[20]

EDB பதிவு தன்னிச்சையானதாக ஆக்கப்படின், ஓர் ஏற்றுமதியாளராக பதிவு செய்துகொள்ளும் நடைமுறை 5 படிநிலைகளுக்குக் குறைக்கப்படலாம் (மேலே உள்ள அட்டவணையில் காணப்படும் படிநிலை 5 – படிநிலை 9). மேலும், தன்னிச்சையான பதிவு EDBயினால் வழங்கப்படும் சேவைகளுக்கு ஏற்றுமதியாளர்கள் வழங்கும் மதிப்பை அளவிடுவதற்கான அளவு கோளாகவும் அமையலாம். அத்தகையதொரு பொறிமுறை ஏற்றுமதியாளர் களுக்கு ஆதரவளிக்கும் பணியைக் கொண்ட EDB போன்ற நிறுவனங்கள் தமது சேவைகளின் தரத்தையும் பயனுறுதித்தன்மையையும் மேம்படுத்துவதற்கும் ஏற்றுமதியாளர்களுக்கு தமது பெறுமதியை எடுத்துக்காட்டுவதற்கு அவற்றை ஊக்குவிக்க உதவும்.

### 1.2.2 EDB மற்றும் IRD ஆகியவற்றில் பதிவு செய்வ-தற்கு முன்னர் உரிமம் வழங்கும் அதிகார பீடங்க-ளில் பதிவு செய்யவேண்டிய முன் நிபந்தனை

தற்போது, EDBயும் IRDயும் தம்மிடம் பதிவு செய்வதற்கான ஒரு முன் நிபந்தனையாக அந்தந்த பொருட்களுக்கு உரிமம் வழங்கும் நிறுவனங்களில் பதிவு செய்த சான்றிதழ்களைச் சமர்ப்பிக்குமாறு வியாபார உரிமையாளர்களை வேண்டுகின்றன. இப் பதிவுகள் மற்றும் அனுமதிப்பத்திரங்களின் குறிக்கோளானது, சம்பந்தப்பட்ட நிறுவனங்களினால் விதித்துரைக்கப்பட்ட உற்பத்தித் தரங்கள் மற்றும் சிறந்த நடைமுறைகள் ஆகியவற்றிற்கு வியாபாரங்கள் இயைந்தொழுகுவதையும் அவர்கள் தடை செய்யப்பட்ட பொருட்களை ஏற்றுமதி செய்யாதிருப்பதையும் உறுதி செய்வதாகும். மேலும், அனைத்து ஏற்றுமதியாளர்களும் அத்தகைய பொருட்களின் ஏற்றுமதியின்போது உரிய அனுமதிப்பத்திரங்கள், உரிமங்கள் மற்றும் சான்றிதழ்கள் ஆகியவற்றை இலங்கை சுங்கத் திணைக்களத்திற்கு சமர்ப்பிக்குமாறு வேண்டப்படுகின்றனர் - இவ்வாவணங்களின்றி ஏற்றுமதியாளர் ஏற்றுமதி செய்ய அனுமதிக்கப்படமாட்டார். எனவே, அந்தந்தப் பொருட்களுக்கான மேலதிகப் பதிவை EDB மற்றும் IRD ஆகியவற்றில் பதிவு செய்வதற்கான ஒரு முன்நிபந்தனையாக ஆக்குவது தெளிவற்றதாக உள்ளது. மேலும், EDB மற்றும் IRDஇல் ஆரம்பப் பதிவின்போது அந்தந்தப் பொருட்களுக்கான பதிவை சமர்ப்பிக்காதிருப்பது, ஏதேனும் பதிவு செய்யப்பட்ட ஏற்றுமதியாளர் பின்னர் அப் பொருட்களை ஏற்றுமதி செய்வதை தடுப்பதில்லை. அவ்வாறு செய்வதற்கு அவர்கள் அந்தந்தப் பொருட்களுக்கான உரிமம் வழங்கும் நிறுவனங்களிடமிருந்து உரிய அனுமதிப்பத்திரங்களை பெற்று ஏற்றுமதியின்போது அவற்றை இலங்கைச் சுங்கத்திடம் சமர்ப்பிக்க வேண்டும். இவ்வாறாக, EDB மற்றும் IRDஉம் முன்நிபந்தனையைக் கொண்டிருப்பதற்கான எந்தவொரு நியாயமும் பொருத்தமற்றதாகிவிடுகிறது.

### 1.3. *பின்வரும் முரண்பாடுகள் இந்நடைமுறையை சில வியாபாரங்களுக்கு ஏனையவற்றை விட கூடுதல் தொல்லை மிக்கதாக்குகிறது.*

### *1.3.1 ஏற்றுமதி இறக்குமதிக் கட்டுப்பாட்டுத் திணைக்கள-த்திலிருந்து (DIEC) ஒரு கடிதம் பெறவேண்டிய தேவை*

சில DSகள் விண்ணப்பதாரிகளின் பொருட்கள் ஏறறுமதிக்கு அனுமதிக்கப்பட்டுள்ளனவா என்பதை உறுதிப்படுத்துமுகமாக DIECஇன் அனுமதியைக் இன்னும் கோருகின்றன.[21] ஏற்றுமதியாளரின் உற்பத்திப் பொருள் தொடர்பான விபரங்களைக் குறிப்பிட்டு DIECக்கு ஒரு கடிதம் எழுதி இவ்வனுமதி பெற்றுக்கொள்ளப்படுகிறது. அதன் பின்னர் DIEC தனது அனுமதியை னுளுக்கு அறிவிக்கும். ஒரு வியாபாரம் DIECயிடமிருந்து ஒரு அனுமதியைக் கோரும் ஒரு DSஇல் பதிவு செய்யப்பட்டிருப்பின், அவ்வியாபாரத்திற்கு "ஏற்றுமதி" என்ற சொல்லை சேர்த்துக் கொள்வதற்காக வியாபாரத்தின் தன்மையை திருத்தும் நடைமுறையானது, இவ்வனுமதியை கோராத DSஇல் பதிவு செய்த ஒரு வியாபாரத்திற்கானதைவிட நீண்டதாக அமையும். பதிவு செய்வதற்கு எடுக்கும் மேலதிக காலம் அக்கடிதம் DSஊடாக தபாலில் அனுப்பப்படுமாயின் 1 வாரமும், கடிதம் நேரடியாக அனுப்பப்பட்டு DIECயிடமிருந்து நேரடியாகப் பெற்றுக் கொள்வதாயின் 1 – 2 நாட்களுமாகும். ஒரே விதமான முடிவை அடைவதற்காக வெவ்வேறு னுளுகளின் ஆவணத் தேவைப்பாடுகளில் நிலவும் முரண்பாடுகள் இந்நடைமுறையை தான்தோன்றித் தனமானதாகவும் நியாயமற்றதாகவும் ஆக்குகின்றன.

### *1.3.2. CHA ஒருவரை கட்டாயமாகப் பயன்படுத்துதல்*

சுங்க விடுவிப்பு நடைமுறையின்போது CHAகள் SLCக்கும் வர்த்தகர்களுக்குமிடையில் இடைநிலையாளர்களாக செயற்படுகின்றன. சுங்கச் சட்டங்கள் மற்றும் நடைமுறைகள் பற்றிய அவர்களது துறைசார் அறிவும் வர்த்தக வழங்கல் பற்றிய அவர்களது தொழில் அனுபவமும் வர்த்தகர்களுக்கும் சுங்க நிர்வாகத்திற்கும் பயனுள்ளவையாக இருக்கலாம்.[24] தற்போதைய பதிவு நடைமுறை ஊர்ய ஒன்றைப் பயன்படுத்துவதை தவிர்க்க முடியாததாக ஆக்குகிறது. எனினும், இது உலக சுங்க நிறுவனத்தின் மீளாய்வு செய்யப்பட்ட கைட்டோ சமவாயத்தின் (RKC) ஏற்பாடுகளுக்கும் உலக வர்த்தக நிறுவனத்தின் வர்த்தக வசதியேற்படுத்தல் ஒப்பந்தத்திற்கும் முரணானதாக உள்ளது. இலங்கை RKC மற்றும் உலக வர்த்தக நிறுவனத்தின் வர்த்தக வசதியேற்படுத்தல் ஒப்பந்தம் ஆகிய இரண்டிலும் கைச்சாத்திட்டு அவற்றின் ஒரு தரப்பினராக உள்ளது.

தரகர் சேவைகளை ஈடுபடுத்துவது தனி உரிமையாளர்கள்/ பங்குடமைகளுக்கு ஒரு 'விருப்பத் தெரிவாகும்' என்று RKC குறிப்பிடுகிறது.[10] மேலும், வர்த்தக வசதியேற்படுத்தல் தொடர்பான உலக வர்த்தக நிறுவன ஒப்பந்தத்தின் உறுப்புரை 10.6 "உறுப்பு நாடுகள் சுங்க தரகர்களின் கட்டாய பயன்பாட்டை

அறிமுகப்படுத்தக் கூடாது" என்று குறிப்பிடுகின்றது. உறுப்புரை 10.6 வுகுயுஇன் கீழ் இலங்கையின் "அ" வகை கடப்பாடாகும். ஒப்பந்தப்படி இது ஒப்பந்தம் கைசாத்திடப்பட்டதும் உடனடியாக அமுலுக்குவரும்.

இந்த முரண்பாட்டைத் தவிர, CHA பயன்பாட்டைக் கட்டாயமாக்குதல் ஒரு ஏற்றுமதியாளராகப் பதிவு செய்து கொள்ளும் செலவையும் காலத்தையும் குறிப்பாக சிறு மற்றும் நடுத்தர முயற்சியாளர்களுக்கு அதிகரிக்கும். EDBஇல் பதிவு செய்வதுபோலவே இச்சேவையையும் தன்னிச்சையான மாற்று வழியாக ஆக்குவது CHAகளுக்கிடையே போட்டியை அதிகரித்து அதன் விளைவாக அவை வியாபாரங்களுக்கு வழங்கும் சேவைகளின் தரத்தை அதிகரிக்கும்.

## 2. தற்போதுள்ள நடைமுறை அதன் தெளிவற்ற தன்மை மற்றும் தகவல் குறைவு காரணமாக பளுமிக்கதாகும்

### *2.1. தகவல் ஒரு பாவனையாளர்-நேய முறையில் கிடைக்கக்கூடியதாக இல்லை*

ஒரு பாவனையாளர்-நேய முறையில் தகவல்களை வெளியிடுதல் நடைமுறையை மேம்படுத்துவதற்கு முக்கியமாகும். பதிவு நடைமுறை தொடர்பான தகவல்கள் அங்குமிங்குமாக பல வலைத்தளங்களில் பரவிக் கிடப்பதை இந்த ஆய்வு காண்கிறது. அதன் விளைவாக, வழக்கத்திலுள்ள முழு நடைமுறையையும் பற்றிய தகவல்களை பெறுவதற்கு பல வலைத்தளங்களை நாடவேண்டும். உதாரணமாக, ஏற்றுமதியாளர்களைப் பதிவு செய்யும் நடைமுறையில் ஈடுபட்டுள்ள தனித்தனி அரச நிறுவனங்கள் தமது நடைமுறைகளை தத்தமது வலைத்தளங்களில் இடுகின்றன. எனினும், முழு நடைமுறையையும் ஒவ்வொரு படிநிலையிலும் தேவைப்படும் ஆவணங்களையும் பட்டியலிடும் தனியொரு ஆவணமோ வலைத்தளமோ இல்லை. பெரும்பாலான நிறுவனங்களும் தம்மிடம் பதிவு செய்து கொள்ளமுன்னரும் பதிவு செய்துகொண்ட பின்னரும் விண்ணப்பதாரர்கள் மேற்கொள்ளவேண்டிய நடவடிக்கைகள் குறித்து அறியாதுள்ளன.

மேலும், ஒவ்வொரு நிறுவனமும் தம்மிடம் பதிவு செய்துகொள்வதற்கு அல்லது தேவையான அனுமதியை வழங்குவதற்கு எடுக்கும் காலம் பற்றிய தகவலை தமது வலைத்தளத்திலோ அல்லது தாம் வெளியிடும் வழிகாட்டு நெறிகளிலோ வழங்குவதுமில்லை. பதிலாக, EDB, IRD மற்றும் தேயிலை சபை ஆகியவற்றில் பதிவு செய்வதற்கான கால எல்லைகள் அரசாங்க தகவல் நிலைய வலைத்தளத்தில் வெளியிடப்படுகின்றன.[25]

### *2.2. கிடைக்கும் தகவல்கள் முழுமையற்றவை*

பதிவு நடைமுறை தொடர்பாக மட்டுப்படுத்தப்பட்டளவு தகவல்களை வழங்கும் பொது வாழிகாட்டு நெறிகளை EDB வெளியிடுகிறது. இவ் வழிகாட்டுநெறிகள் இந் நடைமுறையில் சம்பந்தப்பட்டுள்ள மூன்று முதன்மை நிறுவனங்களையும் - EDB, IRD மற்றும் SLC - ஏற்றுமதியாளரொருவர் பதிவு செய்துகொள்ள வேண்டிய உரிமம் வழங்கும் நிறுவனங்களையும் இனங்காண்கிறது.[26] எனினும், இவ்வழிகாட்டுநெறிகள் சிறப்பு நடைமுறைகள், தேவையான ஆவணங்கள், கட்டணங்கள் அல்லது ஒவ்வொரு நிறுவனத்திலும் பதிவு நடைமுறையை பூர்த்தி செய்வற்கு எடுக்கும் காலம் ஆகியன பற்றிய தகவல்களை வழங்குவதில்லை. வியாபார உரிமையாளர்கள் சம்பந்தப்பட்ட எல்லா நிறுவனங்களினதும் நிபந்தனைகளை பூர்த்திசெய்வதற்கு பல நிறுவனங்களுக்கு ஓடித்திரிய வேண்டியுள்ளது.

முன்னர் குறிப்பிட்டவாறு, SLCல் பதிவு செய்வதற்கு தற்போதிருக்கும் நடைமுறையானது ஏற்றுமதியாளர்களாக ஆகக்கூடியவர்கள் SLCயில் பதிவை பூர்த்தி செய்வதற்கு ஒரு CHAயின் உதவியை நாடவேண்டியுள்ளது. எனினும், SLCஇல் பதிவு செய்துள்ள எல்லா CHAகள் தொடர்பான இற்றைப்படுத்தப்பட்ட நம்பகமான தகல்களை கண்டறிவது சிரமமாக உள்ளது, தற்போது SLCஇல் பதிவு செய்துள்ள எல்லா CHAகளும் அடங்கிய பட்டியல் பகிரங்கமாக கிடைப்பதில்லை. ஒரு பட்டியல் SLCஇல் உண்டு. அதனை சுங்க வளாகத்திற்கு நேரில் சென்றுதான் பார்க்கமுடியும்.

தற்போதைய நடைமுறையின் தெளிவற்ற தன்மையும் தகவல் போதாமையும் ஏற்றுமதி செய்ய நினைக்கும் வியாபார நிறுவனங்களுக்கு அதனை சுமையானதாக ஆக்குகிறது. மேல் மாகாணத்திற்கு வெளியே இருக்கும் வியாபார நிறுவனங்கள்மீது அது மேலும் கூடிய பளுவினை சுமத்துகிறது. அவர்கள் சம்பந்தப்பட்ட பெரும்பாலான நிறுவனங்கள் அமைந்துள்ள கொழும்பிற்கு பலமுறை பயணஞ் செய்யவேண்டியிருக்கும்.

உரிய தகவல்களை பெற்றுக்கொள்வதற்கு ஏற்றுமதியாளர்களுக்கு எடுக்கும் காலத்தையும் ஏற்படும் செலவையும் தற்போதைய நடைமுறையை நியாயபூர்வமானதாக்குவதன் மூலமும் எளிமையானதாக்குவதன் மூலமும் சம்பந்தப்பட்ட சகல தகவல்களையும் எளிதில் சென்றடையக்கூடிய தனியொரு இடத்தில் கிடைக்கக்கூடியவையாக ஆக்குவதன் மூலமும் கணிசமான அளவு குறைக்கமுடியும். மேலும், இந்நடைமுறைக்கு முக்கிய மையமாகத் திகழும் நிறுவனங்கள் உரிய தகவல்களை தத்தமது வலைத் தளங்களில் வெளியிடுவதன்மூலம் விண்ணப்பதாரர்களின் சுமையைக் குறைக்க பங்களிப்புச் செய்யமுடியும் (உ.ம்: கால எல்லை, CHAகள் அடங்கிய பட்டியல்).

## முடிவுரை

இலங்கையில் அடுத்தடுத்து வந்த அரசாங்கங்கள், ஏற்றுமதி ஊக்குவிப்பை ஒரு முன்னுரிமையாக ஆக்கியுள்ளன. இது, ஏற்றுமதி செய்வதற்கு வியாபாரங்களை ஊக்குவித்தல், ஏற்றுமதிக்கான தடைகளை நீக்குதல் ஆகியவற்றை உள்ளடக்கும். இந்தச் சூழ்நிலையில் ஏற்றுமதிகளை ஊக்குவித்தல் மற்றும் புதிய ஏற்றுமதியாளர்களுக்கு ஆதரவளித்தல் என்ற குறிக்கோளுடன் ஒரு ஏற்றுமதியாளராக பதிவு செய்வதற்கான தனியானதொரு நடைமுறை அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. எனினும்,

## கொள்கைக் குறிப்பு

அதன் அம்சங்களுள் சில இந் நடைமுறையை நீண்டதாகவும் வினைத்திறனற்றதாகவும் ஆக்கி இந் நோக்கத்தை முறியடிக்கின்றன. இந் நடைமுறை, வியாபாரங்கள் மீது, குறிப்பாக தனியுரிமையாளர்களாக/ பங்குடமைகளாக பதிவுசெய்து கொண்டுள்ளவைகளும் மேல் மாகாணத்துக்கு வெளியே அமைந்துள்ளவையுமான சிறு மற்றும் நடுத்தர தொழில் முயற்சியாளர்கள் மீது ஒரு நியாயமற்ற பளுவை சுமத்துகிறது. சுமையானவையும் தெளிவான நியாயங்கள் இல்லாதவையுமான விதிகளும் ஒழுங்குவிதிகளும் வியாபாரங்களை ஏற்றுமதி செய்யவிடாது ஊக்கமிழக்கச் செய்வதற்கே உதவும் என்பதோடு, அரசாங்கம் அடைய நினைக்கும் குறிக்கோள்களையும் முறியடிக்கும். இந்த வகையில், இந் நடைமுறை எவ்வாறு எளிமையானதாகவும் தனது குறிக்கோள்களை அடைவதில் மேலும் பயனுறுதி மிக்கதாகவும் ஆக்கப்படலாம் என்பதைக் கண்டறிவதற்கு அதனை மீள் மதிப்பீடு செய்வதினால் அரசாங்கம் பயனடையலாம்.■

வெறிட்டே ரிசேச் நிறுவனத்தின் பொருளாதார ஆராய்ச்சி அணி இவ்வாய்வினை தொகுத்தது.

கொள்கை சுருக்கம் வினுரா ஜயசிங்கவிடமிருந்து ஆராய்ச்சி உறுதுணையோடும், வென்யா டீ சில்வாவிடமிருந்து பதிப்பாசிரியர் உறுதுணையோடும் சச்சிந்த பெர்னாண்டோவினால் ஆக்கப்பட்டது. ஒட்டுமொத்த ஆராய்ச்சி மற்றும் பதிப்பாசிரியர் மேற்பார்வை சுபாசினி அபேசிங்க மற்றும் நிசான் டீ மெல் ஆகியோரினால் செய்யப்பட்டது.

இவ்வணி இரத்தினபுரி மாவட்டத்தில் கள ஆராய்ச்சிக்கு வசதியேற்படுத்தியமைக்காக சப்ரகமுவ வர்த்தகச் சங்கத்திற்கும், வழங்கிய ஆதரவு மற்றும் கருத்துகளுக்காக இலங்கை வர்த்தக சங்கம் மற்றும் பிராந்திய வர்த்தக சங்கங்கள் (பட்டியல் கீழே) ஆகியவற்றுக்கும் நன்றி தெரிவிக்க விரும்புகிறது.

## Endnotes

1 'Vision 2025- A Country Enriched', 2017, available at: http://www.pmoffice.gov.lk/download/press/D00000000061_EN.pdf, [accessed on: January 2018].

2 Export Development Board is the key export promotion agency in Sri Lanka.

3 A licensed product is one that requires an export permit/license from the Sri Lankan agencies that overlook the relevant product sectors. (Please refer to the guide 'The Export Procedure of Sri Lanka' prepared by the Export Development Board (EDB), available at: http://www.srilankabusiness.com/ for a list of products subject to licenses/permits.)

4 Coconut Development Authority, 'Application for Registration as an Exporter of Coconut Products – 2018 and Guidelines & Annexures for 2018 Registration', available at: http://www.cda.lk/web/index.php?option=com_content &view=article&id=28&Itemid=141&lang=en, [accessed on: January 2018].

5 Export Development Board, 'Instructions for registration as an exporter at the EDB', available with the EDB application Form 1, available at: http://www.srilankabusiness.com/pdf/edb_registration.pdf, [accessed on: January 2018].

6 Export Development Board, 'Instructions for registration as an exporter at the EDB', available with the EDB application Form 1, available at: http://www.srilankabusiness.com/pdf/edb_registration.pdf [accessed on: January 2018].

7 A sample application form can be downloaded at: http://bnr.wp.gov.lk/sin/wp-content/uploads/2017/06/Downloads/scan0050.pdf.

8 A sample of the Grama Niladari report can be downloaded at: http://bnr.wp.gov.lk/sin/wp-content/uploads/2017/11/Grama%20Niladhari%20Report%20(2).pdf.

9 A sample application form for EDB registration can be downloaded at: http://www.srilankabusiness.com/docs/registration_of_expoters.doc.

10 Refer to the guide 'The Export Procedure of Sri Lanka' prepared by the Export Development Board (EDB), available at: http://www.srilankabusiness.com/ for the list of products subject to licenses/permits.

11 The EDB website states that, "the exporters should submit Certifications / Licenses of relevant Organizations to consider eligibility to the EDB Registration for items under license i.e. Tea, Gems & Jewellery, Mineral Sands, Wooden products, Fisheries products and Chemicals etc." available at: http://www.srilankabusiness.com/edb/registration.html, [accessed on: January 2018].

12 Existing firms who meet the threshold specified by the IRD, including most Limited Liability Companies are likely to already have a TIN and VAT number (more information available at: http://www.ird.gov.lk/en/Type%20of%20Taxes/SitePages/Value%20Added%20Tax%20(VAT).aspx?menuid=1204).

13 A sample application form for TIN Registration can be downloaded at: http://www.ird.gov.lk/en/Downloads/SitePages/Forms.aspx?menuid=1804, and the Instructions can be downloaded at: http://www.ird.gov.lk/en/publications/Unit%20Profiles_Tax%20Payer%20Service%20Unit/Info_Doc_required_TIN.pdf.

14 A sample application form for the temporary VAT Registration can be downloaded at: http://www.ird.gov.lk/en/publications/Unit%20Profiles_Tax%20Payer%20Service%20Unit/Form_App_Temporary_VAT.pdf.

15 A sample application form for Customs Registration can be downloaded at: http://www.customs.gov.lk/public/files/tin/Application_Form_For_The_Registration_Of_Importers_&_Exporters.pdf.

16 ASYCUDA (Automated SYstem for CUstoms DAta) is a computerised customs management system which

covers most foreign trade procedures. The system handles manifests and customs declarations, accounting procedures, transit and suspense procedures. (For more information refer to: https://asycuda.org/aboutas.asp).

17 Sri Lanka Customs, 'NEW METHOD FOR REGISTRATION OF IMPORTERS & EXPORTERS', available at: http://www.customs.gov.lk/public/files/tin/guide%20for%20imp%20&%20exp.pdf, [accessed on: January 2018]; Key Person interviews with Customs officers, December 2017.

18 Key person interviews with EDB officers, 23 November 2017.

19 Key person interviews with EDB officers, 23 November 2017.

20 Ibid.

21 Key person interviews with officers from selected DS divisions and the DIEC, November and December 2017.

22 World Customs Organisation, 'WCO Study Report on Customs Brokers', 2016, available at: http://www.wcoomd.org/en/topics/facilitation/~/media/WCO/Public/Global/PDF/Topics/Facilitation/Instruments%20and%20Tools/Tools/Study%20Report%20on%20Customs%20Brokers/WCO%20Study%20Report%20on%20Customs%20Brokers_EN.ashx, [accessed on: January 2018].

23 Sri Lankan Embassy, Belgium Luxembourg and the European Union, 'Press Release', 29 June 2009, available at: http://www.srilankaembassy.be/old/HomePagePhoto/June2009/08-06-2009/30-06-2009.pdf, [accessed on: January 2018].

24 World Customs Organisation, 'Permanent Technical Committee', available at: http://www.wcoomd.org/en/topics/facilitation/resources/permanent-technical-committee/~/media/9DAB50A0C2044587B1B5804C79203CCD.ashx, [accessed on: January 2018].

25 Government Information Centre (GIC), 'Registration of Exporters', available at: http://www.gic.gov.lk/gic/index.php?option=com_info&id=2096&catid=94&task=info&lang=en, [accessed on: 20 February 2018]; Government Information Centre (GIC), 'Registration of Tea Exporters, Tea Warehouse, Tea Packers and Tea Importers', available at: http://www.gic.gov.lk/gic/index.php?option=com_info&id=1283&task=info&lang=en, [accessed on: 20 February 2018]; Government Information Centre (GIC), 'Obtaining a Taxpayer Identification Number(TIN)', available at: http://www.gic.gov.lk/gic/index.php?option=com_info&id=864&task=info&lang=en, [accessed on: 20 February 2018]; Government Information Centre (GIC), 'Obtaining a Temporary VAT Certificate', available at: http://www.gic.gov.lk/gic/index.php?option=com_info&id=865&task=info&lang=en, [accessed on: 20 February 2018].

26 Sri Lanka Export Development Board, 'The Export Procedure of Sri Lanka', 2017, available at: http://www.srilankabusiness.com/, [accessed on: January 2018].